அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.5/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்-கொழும்பு.
11 பெப்ரவரி, 1988.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் கற்பித்தல்

மேற்போந்த மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் முகமாக பின்வரும் முறையைக் கையாள்வதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(அ) தற்பொழுது அரசகரும மொழித் திணைக்களம் அல்லது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் நடத்தும் தமிழ்மொழி பாட நெறியைப் பின்பற்றி வெற்றிகரமாக அதனைப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெறும் ஒரு சிங்கள உத்தியோகத்தருக்கும்.

(ஆ) மேற்குறித்த நிறுவனங்களில் ஒன்று நடத்தும் சிங்கள மொழிப் பாட நெறியைப் பின்பற்றி வெற்றிகரமாக அதனைப் பூர்த்தி செய்து அதனையொத்த சான்றிதழொன்றைப் பெறும் சிங்களவரல்லாத ஓர் உத்தியோகத்தருக்கும்.

(இ) குறைந்தது 90% வருகையைப் பூர்த்தி செய்ததற்கும், இந்த நிறுவனங்கள் பாடநெறியை ஆரம்பிக்கும் பொழுது ஆங்கில மொழியில் தேர்ச்சியற்றவரென நிறுவனத்தால் நிச்சயிக்கப்படுவதற்கும் உட்பட்டு, மேற்போந்த நிறுவனங்களில் ஒன்று நடத்தும் ஆங்கில மொழி பாட நெறியைப் பின்பற்றி வெற்றிகரமாக அதனைப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெறும் எவரேனும் ஓர் உத்தியோகத்தருக்கும் ரூபா.500/- சன்மானம் வழங்கப்பட வேண்டும்.

02. மேற்போந்த பாடநெறிகளுடன் சர்வசமமான அம்சங்களிலும் ஒப்பான பாடநெறியொன்றை (தற்பொழுது அரசகரும மொழித் திணைக்களத்தினாலும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினாலும் நடத்தப்படும் பாடநெறிகளுக்கு மேலதிகமாக) ஓர் அமைச்சு அல்லது திணைக்களம் ஒழுங்கு செய்து நடத்துமானால் அந்தப் பாடநெறியைப் பின்பற்றி வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெறும் ஓர் உத்தியோகத்தருக்கு மேற்போந்த சன்மானம் வழங்கப்படலாம்.

03. இதற்காகும் செலவு அந்தந்த அமைச்சுக்கென ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து ஏற்கப்பட வேண்டும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.